[2005 மார்ச் 8

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 24.10.2002 முதல், 10 கிளைச் சிறைகள், தனிக் கிளைச் சிறைகள் முழுவதும் பெண் பணியாளர்களால் நிருவகிக்கப்படும் பெண்கள் சிறைகளாக மாற்றப்பட்டு பெண் குற்றவாளிகள் remand செய்யப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வெ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண் இனத்திற்குப் பெருமை சேர்க்கும் மனித தெய்வம் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், கோடானுகோடி நன்றியினைத் தெரிவிப்பதோடு, விழுப்புரம் மாவட்டம், விழுப்புரத்தில் இயங்கிக் கொண்டிருந்த கிளைச் சிறை இப்போது பெண்களுக்காக மாற்றப்பட்டிருக்கிற காரணத்தால் அங்கு ஆண் கைதிகள் remand செய்ய முடியாத காரணத்தால், ஆண் கைதிகளை உளுந்தூர்பேட்டை, பண்ருட்டி, செஞ்சி, திண்டிவனம் போன்ற கிளைச் சிறைச்சாலைகளுக்கு அழைத்துச் சென்று remand செய்கின்ற இந்தக் கஷ்டமான வேளையிலே விழுப்புரத்திலுள்ள பெருவளாகத் திட்டத்தில் பெண்களுக்குத் தனியாக கிளைச் சிறை கட்டித் தர ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வெ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மீண்டும் ஒரு முறை விழுப்புரம் மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2. பாராட்டு

உலக மகளிர் தினம்—மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வாழ்த்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் இந்தியத் துணைக் கண்டத்திலே, முதலமைச்சராக ஒரே ஒரு பெண் இருப்பதால், பெண்ணினுடைய பெருமை சேர்க்கின்ற இந்த

2005 மார்ச் 8] [பேரவைத் துணைத் தலைவர்]
மகளிர் தின விழாவில் அவர்களுக்கு வாழ்த்துக்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

1. வினாக்கள்—விடைகள்—தொடர்ச்சி

உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 102, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க தள்ளிவைக்கப்படுகிறது.*

வினா எண் 103, திரு. என்.கே. பெருமாள், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

103—

தேர் புதுப்பித்தல்

*** 19832—திரு. என்.கே. பெருமாள்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்திலுள்ள அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தின் தேரைப் புதுப்பித்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், விளாத்திகுளம், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தின் தேர்த் திருப்பணிகள், தற்போது தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. ஏப்ரல் 2005-ல் பணிகள் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளன என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. என்.கே. பெருமாள்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆலயங்களைப் புனரமைப்புச் செய்துவரும் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விளாத்திகுளம், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் பழுதடைந்துள்ள தேருக்குப் பதிலாக புதிய தேர் வடிவமைக்க, 10 இலட்சம்*